கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.116/2023** தேதி:**21.06.2025**

வாதி தரப்பு சாட்சி -1 (சுரேஷ், த/பெ.கஜேந்திரன்) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

வழக்கு சொத்து நான் வாங்கும் போது காலியாக இருந்தது தற்போது அதில் கொட்டகை உள்ளது. பக்கவாட்டில் கீற்று வைத்து மறைக்கப்பட்டுள்ளது. அதில் மின் இணைப்பு உள்ளதா என்றால் நான் கொட்டாய் கட்டும்போது கிடையாது. வழக்கு தாக்கல் செய்தபின் அங்கு மின் இணைப்பு உள்ளதா என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி எங்கு வசிக்கிறார் என்று எனக்கு தெரியாது. அவரின் முகவரி எனக்கு தெரியாது.வழக்கு சொத்து இருக்கும் இடத்தில் வீடு உள்ளது என்றாலும் அதில்பிரதிவாதி வசித்து வருகிறார் என்றாலும் மேலும் அதில் பிரதிவாதியின் பெயரில் மின் இணைப்பு எண் 02-001-013-1802 உள்ளது என்றாலும் அவ்வீட்டினை பிரதிவாதிதான் கட்டினார் என்றாலும் எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு 20 ஆண்டுகளுக்கு முன்பாகவே பிரதிவாதி அங்கு வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் வாங்கும் போது அது காலி மனையாகத்தான் இருந்தது. பிரதிவாதி எந்த ஊரில் வசிக்கிறார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி கடலூர் வட்டம் பெரியகாட்டுப்பாளயத்தில் தான் வசித்து வருகிறார் என்றாலும் அந்த முகவரியில் தான் இந்த வழக்கிற்கான நீதிமன்ற அழைப்பானை அவருக்கு சார்பு செய்யப்பட்டது என்றாலும் இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றாலும் சரியல்ல. நான் ஆவணங்களைப் பார்த்து அதில் இருந்த முகவரியை வழக்குறையில் கொடுத்துள்ளேன்.ஆவணங்களின் அடிப்பையில் கொடுக்கப்பட்ட முகவரியில் அவர் வசித்து வருவதால் தான் அவருக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு கிரையம் கொடுத்தவர் பெயர் ரஞ்சித். நான் ரஞ்சித் இடம் இருந்து கிரையம் வாங்கும் போது வழக்கு சொத்து ரஞ்சித்தின் அனுபவத்தில் தான் இருந்தது.காலி மனையாக இருந்தது. ரஞ்சித்தின் பெயரில் வீட்டு வரி ரசிது இருந்தது. வழக்கு சொத்தினை ரஞ்சித் என்பவர் எக்காலத்திலும் அனுபவத்தில் இல்லை என்றாலும் அவர் பெயரில் வீட்டு வரி ரசிது இல்லை என்றாலும் சரியல்ல.தேவைப்பட்டால் அசல் ஆவணத்தை தாக்கல் தயாராக உள்ளதாக சாட்சி தானாக முன் வந்து கூறினார். ரஞ்சித் என்பவர் பிரதிவாதிக்கு 70000 ரூபாய் 3 சதவீதம் மாத வட்டிக்கு கொடுத்தார் என்றாலும் அந்த கடனுக்கு அடமா 24.12.2010 தேதியிட்ட கிரைய ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றாலும் அந்த கிரைய ஆவணம் மறுபயன் கொடுக்கப்படாமல் ஏற்படுத்தப்பட்டது என்றாலும் மேற்கண்ட கடனுக்கு ஒரு

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2025.06.23 14:52:05 +0530

முறை பிரதிவாதி 90000 ரூபாய் கொடுத்துள்ளார் என்றாலும் கடனை அடைக்க முன்வந்த போது ரஞ்சித் 7 லட்சம் ரூபாயும் பின்னர் 10 லட்சம் ரூபாய் கேட்டுள்ளார் என்றாலும் சரியல்ல. இச்சங்கதிகள் ஏதும் எனக்கு தெரியாது. ரஞ்சித் என்பவர் கொடுத்த கடனை திரும்ப பெற முடியாமலும் கிரைய ஆவணத்தின் மூலம் அனுபவத்தினை எடுக்க முடியாமலும் இருந்ததால் சொத்தினை அபகரிக்கும் நோக்கில் 12.08.2022 தேதியிட்ட கிரைய ஆவணத்தினை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. எனக்கு ரஞ்சித்க்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணம் மறுபயன் அற்றது என்றாலும் வழக்கு சொத்தினை அபகரிக்கும் நோக்கில் ஏற்படுத்தப்பட்டது என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்து இருக்கும் நகர் பெயர் என்ன எனறால் எனக்கு ஞாபகம் இல்லை. இடத்தின் அளவு 1069 சதுர அடி ஆகும்.வழக்கு சொத்தின் சக்கு பந்தி தோறாயமாக கிழக்கு மா மரம் , மேற்கு முள் மரம் , தெற்கு மஞ்கள் நிற கட்டிடம் வடக்கு சுற்றுச்சுவர் வழக்கு சொத்தின் அளவு தோறாயமாகவும் எனக்கு தெரியாது. பிரதிவாதி வழக்கு சொத்தினை எப்படி கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதியின் எதிர் வழக்குறையில் அது கூறப்பட்டுள்ளது என்றாலும் அதனை அறிந்து கொண்டீர்களா என்றாலும் நான் படித்து பார்க்க வில்லை. பிரதிவாதி என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எனது பிரமான வாக்கு மூலத்தில் பிரதிவாதியின் ஆவணங்கள் போலி என்று கூறியுள்ளேன் என்றாலும் அதனை எதன் அடிப்படையில் கூறியுள்ளேன் என்றாலும் தற்போது பட்டா என் பெயரில் இருப்பதால் அவரது ஆவண்ங்கள் போலியாகும். வழக்கு சொத்து ஆரம்பத்தில் சன்முகம் மனைவி மலர்விழி பெயரில் இருந்தது என்றாலும் பிரதிவாதி 20 ஆண்டு காலமாக அதில் வசித்து வந்தார் என்றாலும் பின்னர் அவர் அச்சொத்தை பிரதிவாதிக்கு 25.03.2009 தேதியிட்ட கிரைய ஆவணம் 898/2009 ம் மூலம் தக்க மறுபயனுக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றாலும் என்க்கு தெரியாது. இன்றளவும் பிரதிவாதிதான் வழக்கு சொத்தில் வசித்து வருகிறார் என்றாலும் வீட்டு வரி மற்றும் மின் கட்டனம் அவர் தான் கட்டி வருகிறார் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்து பிரதிவாதிக்குதான் பாத்தியம் என்றாலும் பிரதிவாதி அனுபவத்தில் இருப்பதால் நீங்கள் உறுத்துகட்டளை பரிகாரம் கோர முடியாது என்றாலும் சரியல்ல. உரிமை விளம்புகள் கோரமல் உறுத்துகட்டளை பரிகாரம் மட்டும் கோர முடியாது என்றாலும் சரியல்ல. இவ்வழக்கினை குறைவாக மதிப்பீடு செய்து அதற்கு நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ள காரணத்தினாலும் வழக்கு தள்ளுபடிக்கு அறுகமானது என்றால் சரியல்ல.எனது பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள கிரையப்பத்திரம் பெயரளவுக்கு ஏற்படுத்தப்ட்டுள்ளதால் தான் வழக்கு சொத்தினை பற்றி எந்த விவரமும் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி இல்லை.

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2025.06.23 14:52:20 +0530